தென்மேற்கு பருவமழை காலத்தில்

தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

அதிகாரிகளுக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவுறுத்தல்

▶ தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில், தென்மேற்கு பருவமழையை எதிர்கொள்ள மின்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து காணொலி காட்சி வாயிலாக அனைத்து தலைமை மற்றும் மேற்பார்வை பொறியாளர்களுடன் அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு நடத்தினார். இதில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைவர் ராஜேஷ் லக்கானி, தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் விஷு மஹாஜன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

சென்னை, ஜூன் 8: சென்னை அண்ணா சாலையில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலத்தில் நேற்று மின்சாரம், நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடந்தது6 .இதில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் wகழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மஹாஜன், இயக்குநர் பகிர்மான இயக்குநர், அனைத்து மண்டல தலைமை பொறியாளர்கள் மற்றும் அனைத்து மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில், அமைச்சர் தங்கம் தென்னரசு எதிர்வரும் தென் மேற்கு பருவமழையை எதிர்கொள்ள மின்சாரத்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து 12 மண்டலங்களில் உள்ள 44 மின் பகிர்மான வட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பராமரிப்பு மற்றும் திட்டப் பணிகள் குறித்து விரிவான ஆய்வை மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் எதிர்வரும் பருவமழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிகளை கண்டறிந்து, அப்பணிகளை துரிதமாக செய்து முடிக்க அனைத்து மின்பகிர்மான தலைமை மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார். தமிழ்நாட்டு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அனைத்து அலுவலர்களையும் அமைச்சர் தங்கம் தென்னரசு கேட்டுக் கொண்டார்.

நீட் தேர்வுக்கு முற்றுப்புள்ளி வைக்காமல்

திமுக ஓயாது

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி

சென்னை, ஜூன் 8: நீட் என்னும் மோசடி தேர்வுக்கு முற்றுப்புள்ளி வைக்காமல் திமுக ஓயாது என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

திமுக இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தனது சமூக வலைத்தளம் பக்கத்தில் கூறியிருப்பதாவது: சமூகநீதிக்கும் அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்துக்கும் மாநில உரிமைகளுக்கும் எதிரான நீட் என்னும் மோசடித் தேர்வுக்கு முற்றுப்புள்ளி வைக்காமல் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் ஓயாது. BanNEET இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

பி.இ மாணவர் சேர்க்கைக்கு 2.50 லட்சம் பேர் விண்ணப்பம்

சென்னை, ஜூன் 8: நடப்பாண்டு பி.இ மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்ப பதிவு கடந்த 6ம் தேதியுடன் முடிவடைந்த நிலையில், 2 லட்சத்து 49 ஆயிரத்து 918 பேர் விண்ணப்பித்துள்ளதாக தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கை தெரிவித்துள்ளது.

கடந்த 6ம் தேதி நள்ளிரவு நிலவரப்படி 2 லட்சத்து 49 ஆயிரத்து 918 பேர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 2 லட்சத்து 6 ஆயிரத்து 12 பேர் விண்ணப்ப கட்டணத்தையும் ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 180 பேர் சான்றிதழ் பதிவேற்றம் செய்துள்ளனர். தொடர்ந்து ஜூன் 12ம்தேதி ரேண்டம் எண், ஜூலை 10ம் தேதி தரவரிசை பட்டியல் வெளிடப்பட உள்ளது. கலந்தாய்வுக்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும் என தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கை தெரிவித்துள்ளது.

ICICI Home Finance

கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், அந்தேரி–குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு) மும்பை–400059, இந்தியா
கிளை அலுவலகம்: லயன் ஆர்கேட், 1A, முதல் தளம், மதுரை சாலை, மேற்கு தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி–627001

[விதி 8(6) விதிமுறையை காண்க]

அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **அடையாளப்பூர்வ சுவாதீனம்** செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண்.	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலம் நாள் & நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1.	K பூதலிங்கம் (கடன்தாரர்), ரேகா RL , M/S ஸ்ரீவத்சா இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (உப–கடன்தாரர்), கடன் கணக்கு எண் NHNGL00000821470 & NHNGL00000821469	ஜீவா நகர் 1, நாகர்கோவில் கிராமம், 44வது வார்டு, கன்னியாகுமரி–629002 டிஎஸ் எண்.N4/2–1A–1B நாகர்கோவில், தமிழ்நாடு–629002	Rs. 3,07,27, 870/- ஜூன் 04, 2024	Rs. 2,08,94, 940/- / Rs. 20,89, 500/-	ஜூலை 08, 2024 காலை 11.00 மணி – பிற்பகல் 03.00 மணி	ஜூலை 16, 2024 பிற்பகல் 02.00 மணி – 03.00 மணி

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை **குளோப் டெக் இணையதளத்தில் (URL இணைப்பு– https://BestAuctionDeal.com)** நடத்தப்படும். அடமானதாரர்களுக்கு அறிவிப்பின் மூலம் **ஜூலை 15, 2024 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைத்தொகைகளை செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், லயன் ஆர்கேட், 1A, முதல் தளம், மதுரை சாலை, மேற்கு தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி–627001** என்ற இடத்தில் **ஜூலை 15, 2024 மாலை 04.00 மணி** அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் E காண்க) சமர்ப்பிக்கலாம். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) தங்கள் ஒப்பந்தப்புள்ளியைச் சமர்ப்பிக்க ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்டப் பிரதியை **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், லயன் ஆர்கேட், 1A, முதல் தளம், மதுரை சாலை, மேற்கு தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி–627001** என்ற இடத்தில் **ஜூலை 15, 2024 மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **கன்னியாகுமரியில்** மாற்றத்தக்க வகையில் "ICICI Home Finance Company Ltd– Auction" என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து மேற்கொண்டு சந்தேகதீர்வுகளுக்கு, **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டை 9920807300 இல் அல்லது எங்கள் விற்பனை & சந்தைப்படுத்தும் கூட்டுதாரர் நெக்ஸென் சொலூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்** உடன் தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டுக் காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமைக் கொண்டுள்ளார். விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/

நாள்: ஜூன் 08, 2024
இடம்: கன்னியாகுமரி

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

எஸ்.பி.வேலுமணி பேசியது அதிமுகவின் கருத்து அல்ல

தமிழகத்தில் பாஜ தோற்றுக் கொண்டே இருக்கும்

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பதிலடி

சென்னை, ஜூன் 8:. நாடாளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் திமுக கூட்டணி புதுச்சேரி உள்பட 40 இடங்களிலும் வெற்றி பெற்றது. அதிமுக கூட்டணி மற்றும் பாஜ கூட்டணியால் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை. கோவையில் அண்ணாமலை வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் தோல்வியடைந்தார்.

தோல்விக்கு பின் அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, "பாஜவுடன் கூட்டணி வைத்து போட்டியிட்டிருந்தால் 30 இடங்களில் வெற்றி பெற்றிருப்போம்" என நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார். இதற்கு அண்ணாமலை பதில் கொடுத்திருந்தார்.

அப்போது, அதிமுக தலைவர்கள் தோல்விக்கு வேறு காரணங்கள் கூறும் போது எஸ்.பி.வேலுமணி இந்த காரணத்தை கூறுகிறார். அதிமுகவில் எடப்பாடி பழனிசாமி மற்றும் எஸ்.பி.வேலுமணி இடையே உள்கட்சி பிரச்னை இருப்பதுபோல் தெரிகிறது" என்றார். இந்நிலையில் எஸ்.பி.வேலுமணி பேசியது அதிமுகவின் கருத்து அல்ல என்று அதிமுகவின் முன்னாள் அமைச்சரான டி.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக முன்னாள் அதிமுக அமைச்சர் ஜெயக்குமார் சென்னையில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

பாஜவுடன் கூட்டணி கிடையாது என்பதுதான் அதிமுகவின் நிலைப்பாடு. ஜெயலலிதா உள்ளிட்ட எங்களது தலைவர்களை விமர்சனம் செய்தவர்களைதான் நாங்கள் விமர்சனம் செய்தோம். எஸ்.பி.வேலுமணி பேசியது அதிமுகவின் கருத்து அல்ல. அது அவரது சொந்த கருத்து. தேர்தலில் வெற்றி தோல்வி சகஜம். அதிமுக தமிழகத்தை 30 ஆண்டுகள் ஆண்ட கட்சி. 2026ல் தமிழகத்தில் ஒரு கட்சி ஆட்சி செய்யப்போகிறது என்றால் அது அதிமுகதான்.

அண்ணாமலை புள்ளி ராஜாவாகி விட்டார். அந்த கட்சி எவ்வளவு, இந்த கட்சி எவ்வளவு என புள்ளி விவரங்கள் எடுக்கும் ஐபிஎஸ் அதிகாரியாகதான் செயல்பட்டார். ஒரு கட்சியின் தலைவராக அவரது பேச்சு இல்லை. 2014ல் பாஜ கூட்டணி வாங்கிய வாக்கை விட தற்போது குறைவு. இதை ஏன் அண்ணாமலை பேசமறுக்கிறார்?.

தமிழகத்தில் பாஜ ஆர்சிபி அணி போன்றது. தோற்றுக் கொண்டே இருக்க வேண்டியது தான். நாங்கள் சிஎஸ்கே. 30 ஆண்டுகள் வெற்றிகளை குவித்தோம். வரவிருக்கும் தேர்தலில் சாதனைகள் குவிக்கப் போகிறோம். கேரளாவில் ஒரு இடத்தில் வெற்றி பெற்றார்கள். தமிழகத்தில் ஒரு இடத்திலாவது வெற்றி பெற்றார்களா, புள்ளி விவரத்தை வைத்துக் கொண்டு சீன் காட்டுவது தமிழகத்தில் எடுபடாது. இவ்வாறு அவர் கூறினார்.

நீட் தேர்வை ரத்து செய்ய எடப்பாடி வலியுறுத்தல்

சென்னை, ஜூன் 8: அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்டுள்ள டிவிட்:

நீட் தேர்விற்கான மதிப்பெண் வழங்கும் முறையில் பல்வேறு குளறுபடிகள் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளன. தேர்வு மையங்களில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு ஏற்ப கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டதாக கூறும் நிலையில், இதுகுறித்து நீட் தேர்வு நடத்திய தேசிய தேர்வு முகமையின் விளக்கமும் வெளிப்படைத்தன்மை கொண்டதாக இல்லை. இதுபோக, வடமாநிலங்களில் தேர்வு மையம் ஒதுக்குவது முதல் வினாத்தாள் வழங்குதல் வரை பல்வேறு நிலைகளில் முறைகேடுகள் நடந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் வந்துள்ளன..

இந்த குளறுபடிகள் குறித்து வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே நீட் தேர்வு குறித்த பல்வேறு காரணங்களாலும், இதுபோன்ற நடைமுறை குளறுபடிகள், அதிமுவின் நீட் தேர்வு எதிர்ப்பு நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகிறது. இந்த ஆண்டு நீட் தேர்வில் நடந்த குளறுபடிகள் குறித்து வெளிப்படையான விளக்கம் அளிக்கவும், மாணவர்களின் மருத்துவ கனவை பாதிக்கும் நீட் தேர்வை ரத்து செய்து பழையபடி 12ம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையிலேயே மருத்துவ சேர்க்கை நடத்த ஆவன செய்யவும் புதிதாக அமையவுள்ள ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

கிரியாஸ் THE CONSUMER DURABLE PEOPLE Since 1971

BACK TO SCHOOL & COLLEGE -Offers-

vivo X Fold 3 Pro AI
Pre Book & Get ₹11,999 மதிப்புள்ள ZEBRONICS AUDIO-X BOOM இலவசம்

HAPPY HOURS FREE GOLD & SILVER COIN ALONG WITH YOUR PURCHASE* 10 AM to 4 PM MONDAY to THURSDAY for *T&C visit our store

நம்பமுடியாத ஆஃபர்ஸ்

₹2 லட்சம் முதல் ₹3 லட்சத்துக்கும் மேல் பொருட்களை வாங்கி பெறுங்கள் ₹12,199 மதிப்புள்ள Butterfly Elektra (5+1 Jar) Food Processor வெறும் ₹499 க்கு
₹1 லட்சம் முதல் ₹2 லட்சத்துக்கும் மேல் பொருட்களை வாங்கி பெறுங்கள் ₹7,990 மதிப்புள்ள PHILIPS Audio-Multimedia Speaker வெறும் ₹499 க்கு
₹50,000 முதல் ₹1 லட்சத்துக்கும் மேல் பொருட்களை வாங்கி பெறுங்கள் ₹20,000 மதிப்புள்ள FIREBOLTT Quantum ஸ்மார்ட் காலிங் வாட்ச் வெறும் ₹299 க்கு
₹25,001 முதல் ₹50,000 க்கும் மேல் பொருட்களை வாங்கி பெறுங்கள் ₹4,500 மதிப்புள்ள EUREKA FORBES Vaccum Cleaner வெறும் ₹199 க்கு
₹10,001 முதல் ₹25,000 க்கும் மேல் பொருட்களை வாங்கி பெறுங்கள் ₹2,250 மதிப்புள்ள 64GB Pen Drive வெறும் ₹99 க்கு
₹5,001 முதல் ₹10,000 க்கும் மேல் பொருட்களை வாங்கி பெறுங்கள் ₹914 மதிப்புள்ள Butterfly Mini Chopper வெறும் ₹49 க்கு
₹1,000 முதல் ₹5,000 க்கும் மேல் பொருட்களை வாங்கி பெறுங்கள் ₹499 மதிப்புள்ள 3Pcs Set Water Bottle வெறும் ₹19 க்கு

iPhone
14 (128 GB) மொபைல் ஃபோன் — Per Day EMI ₹37
கிரியாஸ் தள்ளுபடி : ₹5,000
எக்ஸ்சேஞ் போனஸ் : ₹8,000
எக்ஸ்சேஞ் பழைய மொபைல் : ₹25,000 வரை
பேங்க் கேஷ்பேக் : ₹3,000
பரிசு மதிப்பு : ₹5,599
MRP ₹69,900 Effective Price ₹23,301
பெறுங்கள் ₹5,599 மதிப்புள்ள ZEBRONICS சவுண்ட்பார் வெறும் ₹299 க்கு
15 (128 GB) மொபைல் ஃபோன் — Per Day EMI ₹53
கிரியாஸ் தள்ளுபடி : ₹5,000
எக்ஸ்சேஞ் போனஸ் : ₹8,000
எக்ஸ்சேஞ் பழைய மொபைல் : ₹25,000 வரை
பேங்க் கேஷ்பேக் : ₹4,000
பரிசு மதிப்பு : ₹3,799
MRP ₹79,900 Effective Price ₹34,101
பெறுங்கள் ₹3,799 மதிப்புள்ள EUREKA FORBES வாக்யூம் கிளீனர் வெறும் ₹299 க்கு

Redmi by Xiaomi
12 5G (8+256GB) மொபைல் ஃபோன் — Per Day EMI ₹40
கிரியாஸ் தள்ளுபடி : ₹5,500
பேங்க் கேஷ்பேக் : ₹2,250
பரிசு மதிப்பு : ₹2,999
MRP ₹23,999 Effective Price ₹13,250
பெறுங்கள் ₹2,999 மதிப்புள்ள பவர் பேங்க் வெறும் ₹99 க்கு
13 5G (8+256) மொபைல் ஃபோன் — Per Day EMI ₹30
கிரியாஸ் தள்ளுபடி : ₹4,000
பேங்க் கேஷ்பேக் : ₹1,500
பரிசு மதிப்பு : ₹2,999
MRP ₹22,999 Effective Price ₹14,500
பெறுங்கள் ₹2,999 மதிப்புள்ள AIR PODS வெறும் ₹99 க்கு

SAMSUNG
A35 5G (8/128) GB மொபைல் ஃபோன் — Per Day EMI ₹48
கிரியாஸ் தள்ளுபடி : ₹3,000
பேங்க் கேஷ்பேக் : ₹4,990
பரிசு மதிப்பு : ₹3,000
MRP ₹33,999 Effective Price ₹23,009
பெறுங்கள் ₹4,990 மதிப்புள்ள FIREBOLTT ஸ்மார்ட் காலிங் வாட்ச் வெறும் ₹199 க்கு
A55 (5G) (8/128) மொபைல் ஃபோன் — Per Day EMI ₹51
கிரியாஸ் தள்ளுபடி : ₹3,000
பேங்க் கேஷ்பேக் : ₹2,999
பரிசு மதிப்பு : ₹3,000
MRP ₹42,999 Effective Price ₹34,000
பெறுங்கள் ₹2,999 மதிப்புள்ள RAINBOW PRO SPEAKER வெறும் ₹199 க்கு

vivo
V30 (8+128) மொபைல் ஃபோன் — Per Day EMI ₹44
கிரியாஸ் தள்ளுபடி : ₹5,000
பேங்க் கேஷ்பேக் : ₹5,099
பரிசு மதிப்பு : ₹9,990
MRP ₹38,999 Effective Price ₹18,910
பெறுங்கள் ₹9,990 மதிப்புள்ள FIREBOLTT Falcon ஸ்மார்ட் காலிங் வாட்ச் வெறும் ₹199 க்கு
V30E (8+128) மொபைல் ஃபோன் — Per Day EMI ₹46
கிரியாஸ் தள்ளுபடி : ₹5,000
பேங்க் கேஷ்பேக் : ₹2,500
பரிசு மதிப்பு : ₹2,990
MRP ₹32,999 Effective Price ₹22,509
பெறுங்கள் ₹2,990 மதிப்புள்ள ZEBRONICS Bluetooth Headphone+ Ear Phone+Speaker வெறும் ₹199 க்கு

Lenovo லேப்டாப்
GAMING LAPTOP 83GS008SIN / i5 12450HX / 12 GB / 512GB / Win 11 / RTX 2050 4GB / 15.6_FHD IPS — Per Day EMI ₹150
கிரியாஸ் தள்ளுபடி : ₹7,270
பேங்க் கேஷ்பேக் : ₹3,354
பரிசு மதிப்பு : ₹5,599
Back Pack : ₹2,999
பெறுங்கள் ₹5,599 மதிப்புள்ள ZEBRONICS சவுண்ட்பார் வெறும் ₹299 க்கு
MRP ₹69,990 Effective Price ₹50,768
83ER008GIN / i5-12450H / 16GB/512 GB / Win 11 + Office / Intel UHD Graphics / 15.6 FHD — Per Day EMI ₹142
கிரியாஸ் தள்ளுபடி : ₹2,200
பேங்க் கேஷ்பேக் : ₹2,000
பரிசு மதிப்பு : ₹3,799
Back Pack : ₹2,999
பெறுங்கள் ₹3,799 மதிப்புள்ள EUREKA FORBES வாக்யூம் கிளீனர் வெறும் ₹299 க்கு
MRP ₹79,999 Effective Price ₹37,111
₹2,999 மதிப்புள்ள Backpack இலவசம்

hp லேப்டாப்
HP 15S-FQ5329TU/I5/8/512/W11/15"/S/BLIT — Per Day EMI ₹121
கிரியாஸ் தள்ளுபடி : ₹17,749
பேங்க் கேஷ்பேக் : ₹3,000
பரிசு மதிப்பு : ₹5,599
Back Pack : ₹2,999
பெறுங்கள் ₹5,599 மதிப்புள்ள ZEBRONICS சவுண்ட்பார் வெறும் ₹299 க்கு
MRP ₹69,999 Effective Price ₹40,652
HP 15s-FQ5326TU / i3-1215U / 8GB / 512 GB / UHD GRAPHICS / 15.6" FHD / WIN 11 + MSO 21 / SILVER - 9D3N5PA — Per Day EMI ₹94
கிரியாஸ் தள்ளுபடி : ₹8,749
பேங்க் கேஷ்பேக் : ₹1,500
பரிசு மதிப்பு : ₹4,500
Back Pack : ₹2,999
பெறுங்கள் ₹3,799 மதிப்புள்ள EUREKA FORBES வாக்யூம் கிளீனர் வெறும் ₹299 க்கு
MRP ₹49,999 Effective Price ₹32,251
₹2,999 மதிப்புள்ள Backpack இலவசம்

airtel amazonkindle ASUS BLUE STAR BAJAJ boAt BOSCH Butterfly CARVAAN Crompton DAIKIN DELL EUREKA FORBES FABER FIREBOLTT Godrej HÄFELE Haier HAVELLS hp HITACHI IFB iPhone JBL KAFF KENSTAR Lenovo LG Livpure LLOYD mi xiaomi MILTON morphy richards NW GENERAL ONEPLUS onsitego oppo PHILIPS Panasonic POLAR Preethi Premier Prestige Racold realme Redmi SAMSUNG Symphony SIEMENS SONY TATA Sky TCL ULTRA USHA VENUS V-GUARD VL vivo VOLTAS VOLTAS beko Whirlpool ZEBRONICS

கிரியாஸ் THE CONSUMER DURABLE PEOPLE Since 1971
நாகர்கோயில் PWD சாலை, நாகர்கோயில் Ph: 8939970757 / 58
மார்த்தாண்டம் திருவனந்தபுரம் NH Ph:8939673222, 83222
INSTITUTIONAL & BULK SALES CONTACT: 89398 98094
Store Locator
*Conditions apply. Products shown are indicative. Finance at the sole discretion of finance company. Exchange value will differ based on the condition of old product.